2005 பிப்ரவரி 3]

24—

மாசுக் கட்டுப்பாடு

***44708—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரிலுள்ள ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) கோவில்பட்டி நகரில் இரண்டு பெரிய நூற்பாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து தினமும் வெளியேற்றப்படும் 114 கிலோ லிட்டர் கழிவுநீர் அங்கே அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, தொழிற்சாலை வளாகத்திலுள்ள மரம், செடிகள் வளர்க்க உபயோகிக்கப்படுகிறது. கழிவுநீர், தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே வெளியேற்றப்படுவதில்லை. இதுதவிர, கோவில்பட்டி நகரிலுள்ள 'சி' வகை தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சூரியபடுகை அமைப்புகளை நிறுவி, கழிவுநீரை ஆவியாக்கிவிடுகின்றன. 'டி' வகை தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மட்டும் சூரியபடுகை அமைப்புகளை நிறுவ வேண்டியுள்ளது. விரைவில் சூரியபடுகையை நிறுவி, கழிவுநீரைச் சுத்தப்படுத்த, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தியுள்ளது; தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கூறியிருக்கிறார்கள். கோவில்பட்டி நகரில் இயங்கி வருகின்ற இரண்டு நூற்பாலைகளில் லாயல் மில் நூற்பாலையில் இரண்டு சாயப்பட்டறை யூனிட்டுகள் செயல்பட்டு வந்தன. அவற்றில் இன்று ஒன்று செயல்படாமல் மற்றொரு சாயப்பட்டறை யூனிட் மட்டும் செயல்பட்டு வருகிறது. அதிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் அருகிலுள்ள கோவில்பட்டி நகரில் வட பகுதியின் எல்லையாக அமைந்துள்ள மூப்பம்பட்டி கண்மாய் என்ற அந்தக் குளத்தில் அதிகமாகக்

கலக்கிறது. அந்தக் கண்மாயிலிருந்து, அந்தக் கிராமத்தின் விவசாயத்திற்காக, வயல்வெளிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. அந்தப் பகுதிகளில் குறிப்பாக மூப்பம்பட்டி கிராமம், அதேபோன்று சங்கரலிங்கபுரம் பகுதிகளில் நிலத்தடி நீர் வெகுவாக பாதிக்கப்பட்டு, அந்த நீரினுடைய தன்மை மாறக்கூடிய அளவில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறினாலுங்கூட, அந்த லாயல் மில் நிறுவனத்தில் ஒரு சாயப்பட்டறை யூனிட் என்பது இன்றும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதிலிருந்து வெளியேறும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்துவதற்குப் போதிய நடவடிக்கையை எடுப்பார்களா? மேலும் அந்தப் பகுதியிலே அதிகமாக தீப்பெட்டி ஆலைகள் இருக்கின்ற காரணத்தால் அந்தக் குளத்தின் அருகிலே, ஏற்படுகின்ற கழிவுகளை எரிக்கக்கூடிய தன்மை இன்றும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் சுற்றுச்சூழல் கெடாத வண்ணம் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு, இதுபோன்ற பாதிப்பு இருக்கிறது என்று அந்தப் பகுதியிலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கு மாசுபடுகிறது என்று தெரிவித்திருக்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தக்க நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மாசுபடுவதைத் தடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே உறுதி அளித்ததன்பேரில், அதற்கான நடவடிக்கையை எடுத்து, அந்தப் பகுதியிலே சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.